தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௫ | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௰ மார்கழி 1949—திசம்பர் | மலர் ௬

மாட்சிமிக்க சென்னை ஆட்சியாளர் வருகை.

மாட்சி மிக்க சென்னை ஆட்சியாளர் பவநகர் அரசர் அவர்கள் சென்ற 3—12—49 சனிக்கிழமையன்று காலை 11 மணிக்குத் தம் துணைவியாராகிய மேன்மை தங்கிய பவநகர் அரசியாருடன், நம் சங்கத்திற்கு எழுந்தருளினார்கள். தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம் உயர்திரு. T. K. சங்கர வடிவேற் பிள்ளையவர்களும், மாவட்டக் கொற்ற நாயகம் திரு. பாலகிருட்டினமேனன் அவர்களும், மற்றும் மாவட்ட அலுவற்றுறைத் தலைவர்கள் பலரும் உடன் வந்தனர்.

சங்கத்தின் முகப்பில் சித்திர வேலைப்பா டமைந்த பந்தல் ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. வழி நடையின் இருமருங்கிலும், கரும்பு, மஞ்சள், வாழை, கமுகு தென்னை முதலியன, தமிழர் மங்கலப் பண்பாட்டை விளக்கும் வகையில் கவினுற நாட்டப் பெற்றிருந்தன. பள்ளி மாணவர் அணியணியாக நின்றிருந்து வரவேற்றனர். நல்வரவு வளைவுகள் பல இடங்களில் மிளிர்ந்தன. தமிழர் இசை வளர்ச்சியைக் காட்டும் வகையில், பண்டைக் கால போர் முழக்க இசைக் கருவிகளிலிருந்து இற்றைநாள் இன்னிசைக் கருவிகள் வரையில் யாவும் வரிசைப் படுத்தி வழி நெடுக வைக்கப் பட்டிருந்தன. தமிழரின் மொழி, ஓவியம், சிற்பம் முதலிய கவின் கலைகளையும், உள் நாட்டுக் கைத்தொழில்களையும் விளக்கும், பன்னிரண்டு பகுதிகள் கொண்ட கலைக்காட்சி ஒன்று அழகிய வேலைப் பாடமைந்த காட்சிச் சாலையில் அமைக்கப் பட்டிருந்தது. ஓவியக் கலைஞர் திரு. முத்துவேல் அவர்கள், தன் சிறந்த கைத்திறமையினால் கண் காட்சிச் சாலையை, கண்டோர் வியக்கும் வண்ணம் ஒப்பனை செய்திருந்தார்.

தமிழ்ப் பெருமன்றம் 'பொன்னம்பலம்' போல் அமைக்கப் பட்டிருந்தது. தமிழ் மேடையின் நாப்பண் 'நடராசர் திரு வுருவம் திகழ்ந்தது. தஞ்சையிலுந் தமிழ் நாட்டிலுமுள்ள பல அறிஞர்களும், புலவர்களும், பெருநிலக் கிழார்களும், அரசியற் றுறைத் தலைவர்களும் மாணவர்களும், பெண்களும், யாவரும் எழுந்தருளி யிருந்தனர்.

பவநகர் அரசரையும், அரசியாரையும், சங்க முகப்புப் பந்தரில் சங்கத் தலைவர் இராவ்பகதூர், முத்தமிழ் வள்ளல் ஆ. யா. அருளாநந்தசாமி நாடார் அவர்களும், சங்க அமைச்சர் நீ. கந்தசாமிப் பிள்ளை யவர்களும் மாலை சூட்டி வரவேற்றனர். இருபத்தொரு அதிர் வெடிகள் முழங்கின. மன்றத்தில் நுழையும் வழியின் இரு மருங்கினும் அமைக்கப்பெற்றிருந்த இசைக் கருவி கள், ஒன்றன் பின் ஒன்றாக முழங்கின. மாவட்டத் தண்டல் நாயகம் திரு. சங்கரவடிவேற் பிள்ளை யவர்கள் ஒவ்வொரு இடைக் கருவிகளின் அமைப்பையும், இயக்கத்தையும் இரு மருங்கின் பச்சைக் கவின் சிறப்பையும் பண்பையும் எடுத்துக் கூற, அரசரும் அரசியாரும் கேட்டும் கண்டும் மகிழ்ந்தார்கள். மன்ற மக்களின் மகிழ்ச்சிக்கு இடையே, அரசரும் அரசியாரும் மன்றத்தில் எழுந்தருளி மன்ற மேடையில் அமர்ந்தனர். கடவுள் வாழ்த்துக்குப் பின் தலைவ ரவர்கள் வரவேற்புரையை வாசித் தளித்தார்கள். ஆட்சியாளரின் வருகை நினைவு மலராக திருவாவடுதுறை ஆதீனத்தின் பொருட் செலவில், சங்கத்தார் வெளியிட்டுள்ள "தமிழ்ப் பாமாலை" (A Garland of Tamil-Poetry) யென்னும் ஆங்கில நூலையும், தருமபுர ஆதீனத்தார் வெளியிட்டுள்ள "சைவம்" என்னும் ஆங்கில நூலையும், அமைச்சரவர்கள் அளித்தார்கள். பிறகு தஞ்சை திருமதி, இலக்குமி காந்தம், அவர்களின் நடன சாலையிற் பயின்ற திருமதி. வசந்தா அவர்களின் "ஆணிப் பொன்னம்பலத்தே" முதலிய நடராசப் பெருமானைப் பற்றிய பாடல்களுடன் அரிய நடனம் உயரிய வகையில் நடைபெற்றது. அரசரும் அரசியாருங் கண்டு களித்து, உயர்வைப் பாராட்டிய வண்ணம் மன்றத்தி லிருந்து புறப்பட்டு, மன்றத்தின் எதிர்ப்புறம் நடந்துகொண் டிருந்த சிலம்பம், பொய்க்காற் குதிரை யாட்டம், மயிலாட்டம், புலி ஆட்டம் முதலிய ஆடல்களைக் கண்டு மகிழ்ந்த வண்ணம், பொருட்காட்சிச் சாலையில் புகுந்தனர். ஆங்கு அமைந்திருந்த திருவாவடுதுறை, தருமபுர ஆதீனங்களின் பொருட் காட்சிகளை யும், நூல் வெளியீடுகளையும் கண்டு மகிழ்ந்தனர், அவ்வவ் வாதீனத் தம்பிரான் அடிகள் மாலை சூட்டினார்கள். பொருட் காட்சிச் சாலையிலிருந்த பல பொருள்களையும் கண்டு மகிழ்ந்தனர். தஞ்சைக் கலைச் சிறப்புடன், தக்க வேலைப்பாடமைந்த மரத்தா

திருமுறை மாநாடு, திருக்கடவூர்.

சென்ற 11—12—49 ஞாயிற்றுக் கிழமை யன்று முற்பகலில் திருக்கடவூர் என்னும் பழம்பதியில் உள்ள கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் தருமபுர ஆதீனத் தலைவர் தெய்வத்திரு சுப்பிரமணிய தேசிக பண்டார சந்நிதிகள் முன்னிலையில் திருமுறை மாநாடு தொடங்கியது. தஞ்சை 'சப் ஜட்ஜு' திரு. நடராச நாடார் அவர்கள் B.A.B.L. மாநாட்டைத் திறந்து வைத்தார்கள். தஞ்சாவூர் 'சப்-மாஜிஸ்டிரேட்டும்' தமிழ்ப் புலவருமாகிய, திரு. இராமச்சந்திர பத்தர் அவர்கள் B. A., மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்கள். தமிழ் நாட்டில் பல விடங்களில் இருந்து சிறந்த அறிஞர்களும் தமிழ்ப் புலவர்களும், அரசியல் துறை உயர்தர அலுவலாளர்களும், பொதுமக்களும் பெருந் திரளாக வந்திருந்தனர். தில்லைச் சேக்கிழார் கழகத்தார், தில்லை வார வழிபாட்டினர், குடந்தைச் சிவனடியார் திருக் கூட்டத்தார், தஞ்சைச் சிவனடியார் திருக் கூட்டத்தார், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார், குடந்தைத் தமிழ்ச் சங்கத்

லாய விடையேறிய பார்வதி பரமசிவன் திருவுருவம் ஒன்றை, ஐம்பது வெண் பொற் காசுகள் கொடுத்து வாங்கி மகிழ்ந்தனர்.

பின்னர் மங்கல வாத்தியம் பல முழங்க, இணையிலாக் களிப்புடன், இரு கை கூப்பிய வண்ணம் பிரியா விடை பெற்றனர்.

குழுமியிருந்த யாவரும் சங்கத்தாரின் அரிய முயற்சியையும் சிறந்த ஏற்பாட்டினையும் திறம்பட அமைத்த நிகழ்ச்சிகளையும் பலபடப் பாராட்டினார்கள்.

* * * * *

கரந்தைத் தமிழ்ச் சங்க இராதாகிருட்டின தொடக்கப் பள்ளி, உமாமகேசுவர நடுத்தரப்பள்ளி, கரந்தைப் புலவர் கல்லூரி, திக்கற்ற மாணவரில்லம் ஆகிய நான்கு நிலையங்கள் திருவாவடுதுறை ஆதீனத் தெய்வத்திரு. அம்பலவாண தேசிகர் கல்வி நிலையங்களென 14—12—49 ஆம் நாளில் பதிவான ஆட்சி மாற்று முறி வழி, ஆதீன ஆட்சியில் நடைபெற்று வருகிற நற்செய்தியை நம் பொழிலன்பர்கட்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தார் ஆகியோர் இவ் விழாவில் கலந்து கொண்டனர். குடந்தைச் சிவனடியார் வார வழி பாடு இம் மாநாட்டை ஒட்டி இத் தலத்திலேயே நடைபெற்றது.

தருமபுர ஆதீன தெய்வத்திரு பண்டார சந்நிதிகள் அவர்கள் தமது ஆசியுரையில் சைவத்தின் தொன்மை, வன்மைகளைப் பற்றியும் திருமுறைகளின் தெய்வத்தன் மையைப் பற்றியும் சைவ அடியார்கள் மக்கள் உய்வதற் காகச் செய்துள்ள தொண்டுகளைப் பற்றியும் யாவர் மனத் திலும் நன்குபதியும் வண்ணம் பல அரும் செய்யுட்களை மேற் கோள்களுடன் எடுத்துக் காட்டினார்கள். திரு முறைப் பயிற்சியில் தேர்ச்சிபெற்ற மாணவ மாணவி களுக்குப் பல உயர்ந்த பரிசுகளை வழங்கினார்கள்.

'சப் ஜட்ஜு' திரு. நடராச நாடார் அவர்கள் தமது திறப்புவிழா உரையில் இக் காலத்திய சூழ் நிலையில் இத் தகைய மாநாடுகள் பல அடிக்கடி பல் வேறிடங்களில் நடைபெற வேண்டும் என்றும், இச்சீரிய தொண்டில் ஈடு பட்டுள்ள ஆதீனத் தலைவர் அவர்களைப் பாராட்டியும் பேசினார்கள்.

மாநாட்டுத் தலைவர் S. இராமச்சந்திர பத்தர் அவர்கள் தமது தலைமை முன்னுரையில் தென்னிந்தியாவில் தோன் றிய தொன்மையான சைவ சமயம் தமிழர் பண்பாட்டை யும், கலை ஞானத்தையும், ஒழுக்கத்தையும் காட்டும் சிறந்த சின்னம் என்றும், மற்றச் சமயங்களில் சிறந்த கொள்கை களாகக் கொண்டாடப்படும் யாவும் தன்னகத்தே சைவ சமயம் கொண்டு விளங்குகின்றது என்றும், சைவ சமயம் செயல் முறைச் சமயம் என்றும், சித்தாந்த சாத்திரங்களும் திருமுறைகளும் சைவத்தின் இரு கண்கள் என்றும், திரு முறைகள் தெய்வத் தன்மையும், அநுபவ உண்மையும் எளிமையும் வாய்ந்த அருட் பாடல்கள் என்றும், இறைவ னோடு ஒன்றுபட்டு நின்ற தமிழ்ச் சான்றோர்களால், மக்கள் பால்கொண்ட கருணையினால், இத் திருமுறைகள் அளிக்கப் பெற்றன என்றும், முதலில் ஏழாகவும் பிறகு பதினொன்றா கவும் பின்னர் பன்னிரண்டாகவும் இத் திரு முறைகள் சைவ மந்திரங்களை அடிப்படையாகக்கொண்டு, வகுக்கப் பெற்றனவென்றும் இறை வழிபாட்டிற்குத் துணையாக

திரு முறைகள் அமைந்துள்ளன என்றும் பல மேற்கோள் களோடு கற்றவரும் மற்றவரும் பெருமகிழ் வெய்தும் வண்ணம் விரிவாகப் பேசினர். மேலும் எல்லாச் சமயத் தாரும் இறை வழிபாட்டின் பயனை நன்குணர்ந்து அதைக் கைக்கொண்டு ஒழுகும்போது நம் தமிழ் நாட்டு மக்கள் இறை வழிபாட்டின் சிறந்த பயனை நன்குணராது இருத் தல் இரங்கத்தக்கது என்றும், உலகம் போற்றும் உத்தமர் காந்தியடிகள் இறைவழி பாட்டின் பயனை நன்கறிந்தவர் என்றும், அவர் தாம் இவ்வுலகை நீத்துச் செல்வதற்குமுன் பல் வேறிடங்களில் மாலை நேரங்களில் இறை வழிபாட் டைப் பொதுமக்களிடையே நடத்திக் காண்பித்து மக்களை விழிப்படையச் செய்தார் என்றும், தலைவர் திரு. பத்தர் அவர்கள் பேசினர்கள்.

தருமை ஆதீன அடியார் திரு. சோமசுந்தரத் தம்பிரான் அடிகள் திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திரு முறைகளைப் பற்றியும், மாநாட்டுத் தலைவர் திரு. பத்தர் அவர்கள் திருநாவுக்கரசர் அருளிய நான்கு, ஐந்து, ஆறு திரு முறைகளைப்பற்றியும், திருவாசமணி, K. M. பாலசுப்பிர மணியம் அவர்கள் சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறை, மாணிக்கவாசகர் அருளிய எட்டாம் திருமுறை பற்றியும், தருமை ஆதீனக் கல்லூரித் துணைத் தலைவர் திரு. புன்னை வனநாத முதலியார் அவர்கள் ஒன்பதாம் திருமுறையில் ஒன்ருகிய திருவிசைப்பா பற்றியும் மேற்படிக் கல்லூரிப் பேராசிரியர் திரு. ஆறுமுக தேசிகர் ஒன்பதாம் திருமுறை யில் மற்றென்ருகிய திருப்பல்லாண்டு பற்றியும் குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட அமைச்சரும் குடந்தை நகராண் மைக் கழக உயர்தரப்பள்ளி தலைமை ஆசிரியருமான திரு. சுந்தரேசன் செட்டியார் அவர்கள் B. A., L. T., திருமூலர் திருமந்திரமாகிய பத்தாம் திருமுறை பற்றியும், தருமை ஆதீனக் கல்லூரிப் பேராசிரியரும், தருமை ஆதீன தலைமை வித்துவானுமாகிய திரு. தண்டபாணி தேசிகர் அவர்கள் பல அடியார்கள் அருளிய தொகுதியாகிய பதினேராம் திருமுறை பற்றியும், சிதம்பரம் திரு. தண்டபாணி பிள்ளை அவர்களும், கரந்தை நடு நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர், திரு. திருநாவுக்கரசுப் பிள்ளை B. A., L. T., அவர்களும், குடந்தைத் தமிழாசிரியர் திரு. நடராசப் பிள்ளை அவர் களும் சேக்கிழார் அருளிய பெரிய புராணமாகிய பன்னிரண்

டாம் திருமுறை பற்றியும் அரிய சொற் பொழிவுகள் ஆற்றினர். தருமை ஆதின அடியார் திரு. மாணிக்கவாசகத் தம்பிரான் அடிகள் மாநாட்டுக்கு வாழ்த்துப்பா ஒன்று படித்தார்கள்.

தலைவர் தம் முடிப்புரையில் ஒவ்வொரு திருமுறை யிலும் உள்ள ஆழ்ந்த கருத்துக்களை ஆராய்ச்சியோடு எடுத்துக் காட்டினர். சொற்பொழிவாளர்களின் அரிய தொண்டைப் பாராட்டினர். இம் மாநாட்டுத் தொண்டில் தன்னை ஈடுபடச்செய்த தருமை ஆதீனத்தலைவர் அவர்களை வாழ்த்தினர். மேலும் தஞ்சை தாலுக்காவில் உள்ள திருப்பூந்துருத்தி என்னும் பழம்பதியில் உள்ள அப்பர் அடி களின் திருமடம் இடிந்து கிடப்பதால் அதைப் புதுப்பிக்க ஒவ்வொரு சைவ நன் மகனும் ஆவன செய்ய முன் வர வேண்டும் என்றும், இத் திரு மடம் "சரித்திர சம்பந்த மான புராதனச் சின்னம்" என்றும் பேசினர். அப்பர் அடிகளின் வாழ்க்கையிற் சில பகுதிகள் இக் காலத்தில் யாவராலும் கொண்டாடப்படும் உலகம் போற்றும் உத்த மர் காந்தியடிகளின் வாழ்க்கையின் சிறந்த பகுதிகள்போல் உள்ளன என்று எடுத்துக் காட்டினர்.

அன்று இரவு திரு முறைகள் நான்கு வீதிகளிலும் யானை முதலிய விருதுகளுடனும் இன்னிசையுடனும் திருமுறைப் பாடல்களுடனும் ஊர்வலமாகக் கொண்டு வரப்பட்டன. தருமை ஆதீன தெய்வத் திரு பண்டார சந்நிதிகள் அவர்களும் அவர்தம் அடியார் குழாங்களும் அன்று முழுவதும் உடனிருந்து ஒவ்வொன்றையும் சிறப்பித்தார்கள்.

முடிவில் வேளூர் கட்டளை திரு. சோமசுந்தரத் தம்பிரான் அடிகள், பேராசிரியர் திரு. தண்டபாணி தேசிகர் ஆகிய இருவரும் நன்றி கூறினர்கள். புகைப்படம் எடுக்கப்பட்டது.

தமிழ் வாழ்க.

செனனை அரசாங்க நாயகர்,

மாட்சிமிக்க பவநகர் மன்னரவர்கட்கும்,

உயர் திரு,

பவநகர் அரசியாரவர்கட்கும்

தஞ்சாவூர், கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த

வரவேற்புரை.

தமிழநன் னாட்டின் தலைநக ராகும்
தமிழ்வளர் சென்னையில் தகவுட னிருந்தே
அறத்தின் வித்தென ஆணை நடாத்தும்
பவநகர் மன்ன! பாங்குடன் வருக!
அரச ரவர்க்கு அருந்துணை யாகி
பரவுநற் குணமே பயில்வுறும் உருவாம்
அரசியே வருக! அகமகிழ்ந் தீங்கெனச்
சங்கத் தலைவரும் தகுமுறுப் பினருமாம்
எங்கட் கமைந்த இன்னர சீர்! நுமை
வரவேற் கின்றேம்! வாழியர் நீவிர்!
தமிழ்மொழி தமிழ்க்கலை தமிழர்தம் பண்புகள்
ஆயவை தம்மால் அகம்கொள நிற்கும்
வாழ்வியல் நெறியில் வயங்கிட மக்கள்
தாழ்விலா துழைக்கும் தக்கநற் றெண்டை.
எம்மருஞ் சங்கம் இந்நூற் றண்டில்
நாற்பதி யாண்டுகள் நன்கன மியற்றி
உள்ளது; இதனை உளங்கொளல் வேண்டும்.
"உலகிடை வழங்கும் ஒங்குதொன் மொழிகளுள்
தமிழே தொன்மையில் தன்னிக ரற்றதாம்"
என்றே மொழிவர் இயலறி புலவர்.
அன்னது நிற்க, ஐயிரொன் றுரைப்பேம்!
இங்கிலாந் ததனை எழிலுறும் முதலாம்
சியார்ச் மன்னர் சீருடன் ஆண்ட
காலத் திருந்த கவின்குரு மார்களுள்
சீகன்பால் கெனும் சிறந்திடு மறிஞர்க்குக்
கிரேக்கநன் மொழியில் கிளர்வர வேற்புப்
படித்தங் களிக்கஅப் பண்புடை யாளர்
இலக்கிய எழிலிலும் எனைப்பல வற்றிலும்
அம்மொழிக் கிணையாம் அருந்தமிழ் தன்னல்
பதிலுரைத் தாரெனல் பாரெலாம் அறியும்!
மக்கள் வணங்க மன்னிய பண்பின்
வடிவா யிலகிய வளர்புக ழாளராம்

காந்தி யடிகளும் கருத்தினில் தமிழை
இருத்தி மொழிந்த இன்னுரை அறிவீர்!
"உலக மக்களுள் ஒருமையை வளர்க்கத்
தமிழ்மொழி யாண்டும் தழைத்திடல் வேண்டும்"
என்ன மொழிந்தனர்! இன்னும் கூறுவம்.
முதலிடை கடையெனும் முப்பெருஞ் சங்க
நூல்களுள் இறுதிச் சங்கநன் னூலாம்
திருக்குறள் தன்னைத் திகழ்ந்திடு மொழியெலாம்
பெயர்த்து வைத்துப் பெருமை கொண்டன.
மற்றுமச் சங்கம் மருவிய பாடல்கள்
தமிழரின் மாண்பைத் தரணிக் குணர்த்தும்
ஓவிய மென்ன ஒளிறுநற் பண்பின.
இத்திறம் நிற்க, எம்மருந் தமிழைக்
கையினில் வேலும் கருத்தினில் தமிழுமாய்க்
கொண்டே காத்த குலேவில்சீர் பாண்டியர்
நிறுவிய சங்கம் நின்றதற் பின்னர்
தமிழைப் பேணும் தக்கநற் பொறுப்பெலாம்
எந்தமிழ்ச் சங்கத் தினிதே சார்ந்தது.
தமிழ்க்கலை தமிழ்மொழி தமிழமேம் பாடாம்
என்னுமத் துறைகளில் எம்முடைச் சங்கம்
குன்றின் விளக்கென நின்றொளிர் கின்றது,
தமிழின் தூய்மை தளிர்க்கவிச் சங்கம்
தக்கநற் போர்பல தான்மேற் கொண்டது.
தாய்மொழிக் கலைக்கிச் சங்கம் புரிந்த
அரும்பெரும் தொண்டினை அறிந்து மகிழ்ந்த
சென்னை அரசினர் முன்னிய நலமுற
அண்ணுமலையின் நண்ணும் பல்கலைக்
கழகப் பேரவைக் குழுவினுள் ஓரிடம்
தந்தமை, பெருமிதம் ததும்ப நும்தமக்
குரைத்திடு கின்றேம்! ஊழி! வாழியர்!
திருவா வடுதுறைத் திருமடத் தலைவரா
வயங்குநற் சைவ மணியொளி ஆகும்
அம்பல வாண பண்டார அடிகள்
இச்சங் கத்தின் ஏற்றம் உணர்ந்தே
சங்கம் இயற்றும் தனித்தொண்டுகளாம்
ஆராய்ச் சித்துறை அரும்வெளி யீடுகள்,
ஆண்டு விழாக்கள், அடியர்நாட் கூட்டம்,
பள்ளிகல் லூரிகள் படைத்தன போற்றல்,
என்னும் பல்வகை எழிற்றெண் டுகளுள்,

(295-ஆம் பக்கம் பார்க்க.)

திருக்குறள்

பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D.

(முற்றொடர்ச்சி: துணர் உரு, மலர் அ, பக்கம் 264.)

வாய்மை.

இனி வாய்மை யல்லன வெல்லாந் தற்பொருட்டே பயன் படுதற் கேதுவாதல் பற்றித் தற்பொருட்டும் பிறர் பொருட்டும் பயன் படுதற்குத் துணை புரியும் வாய்மையைப் போல நன்றான பிறவறமில்லை யென்று உவமப் பொருவுப் பொருளிற் கூறினு மமையு மென்க.

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'யாம் மெய்ந் நூல்களாகக் கண்ட நூல்களுள் யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிறவறங்களில்லை' என்னும் உரையைத் தந்து, உரை விளக்கத்தில் மெய்ந் நூல்கள் என்றது இறைவர் கூறிய வாகமங்களை யென்றும், இப் பாட்டால் இவ்வறத்தினது தலைமை கூறப்பட்டது என்றுங் கூறினர்.

ஆகமங்கள் பலவும் ஒவ்வொரு காரணம் பற்றி ஒவ்வோரிடத்தில் ஒவ்வோரறத்தைப் புகழ்ந்து நிற்கு மென்பது அறியக் கிடக்கின்றமையான், உரை செய்வாராவார் அவ்வக் காரணங்களைக் கண்டு அவ்வவ் வறங்களின் தலைமையைச் சாதிப்பதே முறையாகு மென்பது கிடப்ப, இதனை நோக்கினர் போன்று இப் பாட்டிற்குப் பொருள் கூறுமிடத்து இறைவர் கூறிய வாகமங்களுள் 'யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்

பட்ட பிற வறங்கள் இல்லை என்று கூறுதற்கண் யாதொரு தன்மையானும் என்பது இன்ன வின்னவாற்ருனு மென்று கூருது விட்டேகிப், பின் 'ஒன்ருக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று' என்னுங் குறளுக்குப் பொருள் கூறுமிடத்து, பொய்யாமையினுங்கு கொல்லாமை சிறந்தது என்று முடித்தற்கு 'முற்கூறியதிற் பிற் கூறியது வலியுடைத்து' என்னும் உத்தியானும் பிற காரணத்தானுஞ் சாதித்து நின்றவர், ஈண்டு அவ்வாறு சாதியாது நின்றது இஃது உபசாரம் பற்றிய கூற்றென்று கருதினுராதல் வேண்டும். இஃது அவ் வகைக் கூற்றன் றென்பது மேற்காட்டப்பட்டமையான், அழகியா ருரையைப் போலி யுரை யென்க.

இப் பாட்டு என்னுதலிற்ருே வெனின், தவஞ் செய்வான் மாட்டுக் காணப்படுந் துணைச் சாதனங்களுள் வாய்மையானது அவனையே மெய்க்கண் உய்க்கும் ஏனைய வறங்கள் போலன்றி அவனையும் பிறரையும் ஒருசேர நிலை பேறுடைய வீடுபே றெய்துவிக்குந் தன்மைத் தென்பது பற்றி அவ்வேனைய வறங்களினுங்குச் சிறந்த தாகலான், அன்னுன் அதனைக் கடைப் பிடிக்க. எ-து.

3. வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

(இ-ள்) வாய்மை எனப்படுவது யாதெனின்—தவஞ் செய்வான் மாட்டுக் காணப்படும் வாய்மை வகைகளுள் வாய்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதெனின்; யாதொன்றும் தீமை இலாத சொலல்—தனக்கும் பிறர்க்கும் யாதொன்ருனுந் தீமை பயவாதனவற்றைச் சொல்லுதல், ஆகலான் அன்னுன் அவ் வகை வாய்மையைக் கடைப் பிடிக்க. எ-று.

எனப்படுவது என்பது என்னென்னு முதனிலை அகரச் சாரியையும் செயப்படு பொருண்மை யுணர்த்தும் படு

வென்னும் விகுதியும் பெற்று எனப்படு வென நின்று முதனிலைத் தன்மை யெய்திப் பின்னர் வகரயிடை நிலையும் அகரச் சாரியையும் து விகுதியும் பெற்று எனப்படுவ தென முடிந்து நின்ற ஒன்றறி சொல். அஃது ஈண்டு 'ஊரெனப் படுவது உறையூர்' என்புழிப் போலச் சிறப்புத் தோன்ற நின்ற சொல்லுருபாய் நின்றது. யாதொன்றும் என்புழி ஒன்று என்பதன் பின் ஆனுருபு விரித்துப் பொருளுரைக்க. ஈண்டு யாதென்னும் வினவால் வரும் ஒன்றன்பாற் பெயர் ஒன்றென்றும் எண்ணுகு பெயர்க்கு அடையாய் நின்றது. யாதொன்றுனும் என்றது காலமிட முதலியனவற்றுள் யாதொன்றுனும் என்றபடி. உம்மை முற்றும்மை. இலாத என்பது தகர இடை நிலையும் அகர விகுதியும் பெற்று அன் சாரியை பெறாது நின்ற குறிப்பு வினையாலணையும் பெயர். தீமை யிலாத என்பது ஒரு சொன்னீர்மைத்தாய் நின்ற தொகையல் தொடர் மொழி. சொலல் தொழிற் பெயர்.

'தவஞ் செய்வானுவான் மேற்கொள்ளும் அறங்களுள் வாய்மையானது அவனையே தூக்கும் ஏனைய வறங்கள் போலன்றி அவனையும் அவன் மாணுக்கரையும் வீடுபே றடைவித்தற்கு ஏதுவாகு மென்பது பற்றி அதனினுங்கு நன்றுன பிற வறங்களில்லை என்றீர். அவ் வாய்மையானது பல திறப்படுமே, அவற்றுள் எதனை அறிவுடையோர் புகழ்வர்' என்றுற்கு உத்தரம் இக் குறளாற் கூறுகின்றுர்.

'ஒருவன் இன்னவாறு இன்னது செய்யின் இன்னது விளையும்' என்பதைத் தவஞ் செய்வானுவான் காண்டல் கருதல் உரை யென்னும் அளவைகளானுயினும், சுருதி, யுக்தி, அனுபவங்களானுயினும் அறிந்து நின்று அவற்றைத் தன் மாணுக்கர்க்குச் சொல்லுங்கால் புத்தி கொண்டு விசாரித்து அவை தனக்காயினும் அவர்க்காயினுங் கால மிட முதலாயினவற்றுள் யாதாயினு மொரு வாற்றுன் றீமை பயக்கு மென்று கண்டானுயின் அவற்றைச் சொல்லா

தொழிந்து, ஒருவாற்ருனுந் தீமை பயவாத வகை கண்டன வற்றையே சொல்லி நின்ருனுயின், அதனையே அறிவுடையோர் வாய்மை யென்று சிறப்பித்துச் சொல்லுவர் என்று கூறியவாருயிற்று.

இனி, உலகத்து மக்கள் வினைகளை நல்வினை, தீவினை, வெறுவினை யென மூன்ருகக் கொள்வது போல் அவர் சொற்களையும் நற் சொல், தீச் சொல், வெறுஞ் சொல்லென மூன்ருகக் கொள்ளலா மன்றே. ஆயின், வாய்மை என்பது தீமை யிலாத சொலல் என்று கூறின், அக் கூற்று வாய்மை யென்பது நற் சொல்லையும் வெறுஞ் சொல்லையுஞ் சொலல் என்பதாகும். வாய்மைக்கு இலக்கணம் நற்சொற் சொலல் என்பது பொருந்து மாற்றுக்கு ஏற்புடைத்தாயினும் வெறுஞ் சொல்லையுஞ் சொலல் என்பது ஒவ்வாதே யெனின், அதனுனே யன்றே வாய்மை யெனப்படுவது யாதொருவாற்ருனுந் தீமை பயவாதன சொலல் என்ரு ரென்க. வெறுஞ் சொல் உலகிய லுணர்வையே யடிக் கொண்டொழுவார்க்கு நன்மை தீமை பயவா வெனினும், சொல்வானுகிய தவத்தவனுக்குப் பண்பானுங் கேட்டானுகிய மாணுக்கனுக்குக் காலத்தானுந் தீமை பயக்குமென்க. அஃதெவ்வாறெனின் கூறுதும். ஒன்றை வேண்டி நின்ற மாணுக்கனுக்குத் தவஞ் செய்வானுவான் வெறுஞ் சொற் சொன்னுனுயின், அஃது அத் தவத்தவனது அருட் பண்பை வேறுபடுத்து மாகையான் அவனுக்குப் பண்பாற் றீமையையும், கேட்டானுகிய மாணுக்கனது அறிதல் வேட்கையை நிரம்பச் செய்தற்கண் காலத்தைத் தாழ்த்து நிற்கு மாகையான் அவனுக்குக் காலத்தாற் றீமையையும் உண்டாக்கு மென்பது கண் கூடு. ஆகலான் தவஞ்செய் வானுக்குச் சொற்கள் நற் சொல், தீச் சொல் என்னு மிரு வகையவே யென்பதும், இதனுனே வாய்மை யெனப்படுவது யாதொன்ருனுந் தீமை பயவாதன சொலல் என்றது வாய்மை யெனப்படுவது நன்மை பயப்பனவற்றையே சொலல் என்பதும் பெறப்படும். ஈண்டு நன்மை யென்றது

வீடுபேற்றை, ஆகையான், நன்மை பயப்பன வென்றது வீடு பேற்றையும் தவஞ் சிவோகம் பாவனையாகிய சாதனத் தையும் அதன் துணைச் சாதனங்களாகிய கள்ளாமை, வாய்மை, கொல்லாமை முதலியனவற்றையுமே.

இனித், தவஞ் செய்வான் மாட்டுக் காணப்படும் மூவகை வாய்மைகளுள்ளும் இவ் வகை வாய்மையை யாது காரணத்தான் அறிவுடையோர் புகழ்வாரெனின் கூறுதும்: தவஞ் செய்வானுவான் தன் கரணங்க ளெல்லாஞ் சிவ கரணங்களாகிப் பேசும் வரைத் தானறிந்ததைப் பொய் யாமை யென்னும் வாய்மையைக் கடைப் பிடித்து நின்ரு ஞயின், அஃது அவனையும் அவன் மாணுக்கருள் அதி பக்குவ முள்ளாராகிய சிலரையுமே உய்தி கூடுவிக்கு மென்றும், இஃது அதுபோலன்றி அவனையும் அவன் மாணுக்கருட் பக்குவத்திற் குறைந்தார் கூடிஞராகிய பலரையும் உய்யச் செய்யு மென்றும் அறியக் கிடக்கின்றமையான் இதனை அதனினுங்குச் சிறந்ததாக அறிவுடையோர் கொள்வ ரென்க. இனி, மேலைக் குறளாற் கூறும் புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மைச் சொற்களைச் சொல்ல லாகிய வாய்மையானது சரியை, கிரியை, யோகங்களை மேற் கொண்டு காயத் தொழில் மனத் தொழில் என்னு மிவற்ருன் இறைவனை வழிபடுபவரைப் பரம்பரையான் வழிப் படுத் தற் பொருட்டுக் கையாள்வ தொன் றென்றும், இஃது அது போலன்றி ஞானத்தை மேற் கொண்டு அறிவுத் தொழின் மாத்திரையான் நிற்றற் குரியாரை நேரே வீடுபேறடை வித்தற்குப் பயன் படுவ தொன் றென்றுங் கொண்டு, அறிவுத் தொழிலை நோக்கக் காயத் தொழில் மனத் தொழில்கள் தூல மாகு மாகையான் அவ் வறிவுத் தொழிலை ஊக்கும் வாய்மையைக் காயத் தொழில் மனத் தொழில்களை ஊக்கும் வாய்மையினுங்குச் சிறந்ததென்று அறிவுடையோர் புகழ்வ ரென்க.

இக் குறளுக்குப் பரிமேலழகர் 'மெய்ம்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது யாதென்று வினவின், அது பிறிதோ ருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களைச் சொல்லுதல்' என்னும் உரையைத் தந்து உரை விளக்கத்தில் 'இதனான் நிகழ்ந்தது கூற லென்பது நீக்கப்பட்டது. அது தானும் தீங்கு பயவாதாயின் மெய்ம்மையாம், பயப்பிற் பொய்ம்மையா மென்பது கருத்து என்று கூறினர்.

ஈண்டு பிறிதோ ருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொற்களுட் சில சொல்லுவானுக்குத் தீங்கு பயக்கு மென்பது அறியக் கிடக்கின்றமையின், அவற்றைச் சொல்லுதலையும் அறிவுடையோரால் போற்றப்படும் வாய்மை யென்று அழகியார் கொண்டனர் போலும். இன்னும் இவ் வாய்மையை அறிவுடையோர் புகழ்தல் எக் காரணத்தாலாய தென்று கூறினரு மல்லர். பிறிதோ ருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத தன்மையையே காரண மாகக் கொண்டு அதனை உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியாற் பெற வைத்துப் புகழ்ந்தா ரெனின், புரை தீர்ந்த நன்மை பயக்கும் பொய்ம்மையாகிய வாய்மையினும் அத் தன்மை உளதாகையான் இப் பொய்ம்மையாகிய வாய்மையும் புகழப்பட வேண்டும். இது புகழப்படா தாகையான், அத் தன்மை காரணமாகா தென்க. ஆகையான் காரணங் கூறினரல்லர் என்பது தேற்றம்.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவஞ் செய்வானுவான் தன் மாணுக்கர்க்குப் பக்குவங் கண்டு வீடுபேறு பயக்கும் ஞான சாதனத்தைச் சொல்லி வாய்மை கடைப் பிடித்து அறிவுடையோரின் புகழுரையை யாள்க.

எ-று.

(தொடரும்)

உள நூல்

வித்துவான் திரு. M. குஞ்சிதபாத தேசிகர்,
தமிழாசிரியர், உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

குழந்தைகளின் மனம்.

குழந்தைகள் இயற்கையில் வேறுபட்டிருக்கின்றன. ஒரு குழந்தை மனம் போல் மற்றொரு குழந்தை மனம் இல்லை என்பது உற்று நோக்குவோர்க்குப் புலப்படுவதாகும். ஆனால் இளங் குழந்தைகளின் மனம் வெண்மையான ஆடைபோலக் குற்ற (களங்க) மற்றதாகும். நெருங்கிப் பழகுவோரின் செயலை யொட்டியே குழந்தையின் மனம் அமைவ தாக இருக்கும்.

நற்குணமுள்ள பெரியோரைச் சார்ந்து பழகிய குழந்தைகளிடம் கடவுளன்பு, தூய்மை, குற்றமற்ற செய்கை இனிமை (மரியாதை) யாகப் பேசுதல் இவை யாவும் அமைகின்றன என்பது மிகையாகாது. குற்றமான பேச்சோ செய்கையோ இவை குழந்தைகளின் எதிரில் நடப்பின் அவ்வாறே குழந்தைகளும் பின்பற்றி நடக்கத் தொடங்குகின்றன.

பொதுவாக நல்ல நிறமுடைய பொருள்களையும் தின் பண்டங்களையும் விரும்புந் தன்மை குழந்தைகளுக் குண்டு. அஃதே போல விளையாட்டிலும் நல்லன கொண்டே மகிழ்வர், இவ் விளையாட்டுத் தன்மைகளை யறிந்து பெற்றோர்கள், கட்டி வைத்தாற் போற் செய்யாமல், குற்றமற்ற விளையாட்டுக்களை விளையாடச் செய்தல் வேண்டும். இளங் குழந்தைகள் கூட விளையாடுங் குழந்தை இல்லாத இடத்தில் பெரியோர்களும் இளங் குழந்தை யுள்ளத்துக்கு ஒப்ப தன் மனத்தைத் தயார் செய்துகொண்டு அக் குழந்தைகளோடு பழகின் குழந்தைகள் மிகவும் பிரியமாக விருக்கும்.

மேல் நாடுகளில் இளங் குழந்தையின் மனோ நிலையும் உடல் நிலையு மறிந்தவர்களின் மேற் பார்வையில் விளையாடுங் கருவி, படுக்கை, தின்பண்டங்கள் முதலியன உள்ள விடுதிகள் பல உள்ளனவாம்.

உணவு, தின்பண்டம் வழங்கல், விளையாடுதல் முதலிய வற்றைப் பெற்றோர்கள் குழந்தையின் நன்மையை நினைத்து (தம் சோம்பலைக் கருதாமல்) குறித்த நேரத்தில் பழக்கி வருவதோடு தாமும் நெருங்கிப் பழகின் குழந்தையின் மனப் போக்கு நன்கு தெளிவதோடு நோயின்றிச் செழுமையாய் வளரும் என்பதில் ஐயமில்லை.

ஒரு குழந்தையை உட்காரும் போதெல்லாம் பலகை அல்லது இருக்கைகளில் உட்காரவைத்துச் சிலநாள் பழக்கஞ் செய்து விட்டால் பலகை முதலிய இருக்கையின்றி அக் குழந்தை கீழே உட்கார மறுத்து விடுவதைக் காணலாம்.

பேசுவதிலும் ஐயா வாருங்கள்! வணக்கம்! என்னுஞ் சொற்களைச் சொல்லச் செய்யின் அவ் வார்த்தைகளையே சொல்வதைப் பார்க்கலாம்.

இவ்வாறு பார்த்ததையும் கேட்டதையும் பழகிக் கொள்ளுந் தன்மை குழந்தைகளுக் குண்டு.

பெற்றோர்கள் பிற மக்களையோ குழந்தைகளையோ குழந்தையின் உள இயல்பை (மனத்தின் தன்மை) மறந்து எதிரில் கொடுஞ் சொற்கள், அல்லது குற்றமுள்ள மொழி களைக் கூறினல் கேட்டுக்கொண்டிருந்த குழந்தை திருப்பிச் சொல்லத் தொடங்குகிறது. ஆகையால் குழந்தைகளுள்ள இடங்களில் தீயவை நிகழா வண்ணம் பார்த்துக் கொள்வதில் மிகவும் கவனஞ் செலுத்தல் அவசியமாகும்.

விளையாட்டும்—கற்பனையும்

உட்கார்ந்துள்ள பலகைகளை வண்டி அல்லது 'மோட்டார்' ஆகவும் அட்டை, தட்டு முதலியவற்றை

மிட்டாய்த் தட்டாகவும் கற்பனை செய்து விளையாடுவதைக் கண்கூடாகப் பார்க்கலாம்.

பொம்மைகளைக் குழந்தைகள் தங்கள் தங்கள் தாயார் தங்களுக்குச் சொல்வது போன்று பொம்மைகளைப் பார்த்து அழாதே என்றும் பால் குடி என்றும் கூறுவதைச் சிறிது ஆராயின் குழந்தையின் கூரிய மனப் போக்கு நமக்குப் புலப் படுவதாகும். விளையாடு மிடங்களில் குழந்தைகளின் கூரிய மனம் தீய வழியில் சிறிதும் கலவாதபடி நற் குழந்தைகளுடன் விளையாடச் செய்யவேண்டும். விளையாட்டிடம் மென்மை யாகவும் தூய்மையாகவும் இருத்தல் வேண்டும்.

மணற் பாங்கான இடம் மேலானது.

இரப்பராலாகிய பொம்மைகளை வைத்து விளையாடச்செய்தால் குழந்தைகளின் மேல் பட்டாலும் தீமை விளையாது. குழந் தைகள் பல ஒன்றன் பின் ஒன்ருக வரிசைப்படுத்தி, புகைவண் டித்தொடர் போன்ற பெயரைச் சொல்லி ஒருநாள் விளையாடச் செய்தால் அவை மறுநாள் முதல் அதே மாதிரி விளையாடத் தொடங்கும். குழந்தைகளை அடிக்கடி பயப்படுத்தக் கூடாது. பயப்படுத்திஞல் அவற்றின் மனம் வளர்ச்சி யடையா. ஆனல் விளக்கைப் பற்றிப் பிடிப்பேன் என்பதைப் போன்ற தீமையான பிடிவாத குணமாக இருக்குஞ் சமயத்தில் மாத்திரம் அவசியம் பயப்படுத்த வேண்டும். மற்றைக் காலங்களில் பிடித்த வேறு இனிய பண்டங்களின் மீதோ கண் கவரும் வண்ணப் பொருள்களின் மீதோ மனத்தை மாற்றி, பிடிவாத குணங்களைப் போக்கல் மிகவும் சிறந்த வகை யாகும். பேசத் தெரிந்த குழந்தைகளிடத்தில் அவ் விளங் குழந்தையின் மனத்திற் பதியும்படி காரணங் கூறினல் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டு திருந்துவதையுங் காணலாம்.

சில பிடிவாதமான குழந்தைகள் விளக்கைத் தொட வருகின்றன. தடுத்தால் கேட்கவில்லை. இந் நிலையில் குழந்தையின் ஒரு விரலை நாமே பிடித்துத் தீமை பயவாதபடி

விளக்கினருகே சிறிது கிட்டே கொண்டு போகின் தாமே ஊ சுடும் என்று விலகி ஓடுவதுடன் பின்னொருக்காலும் தீயிடம் அணுகாது. ஆனால் எல்லா இடங்களிலும் இவ் வனுபவம் ஒத்து வாராது. குழந்தைக்கும் சமயத்திற்கும் ஏற்றவாறு அமைத்துக் கொள்வதே மேல். விளையாட்டாகவே கதை; கதைகளின் மூலமாக கேள்விக்குப் பதிலளித்தல் சுகாதாரம் முதலியவற்றைச் சிறு குழந்தைகளுக்குப் பழக்கலாம். ஆனால் பழக்குபவர்களுக்குப் பொறுமையோடு குழந்தையின் மன இயல்பும் தெரிந்திருக்க வேண்டும்.

குழந்தைகளைப் பழக்குவதில் நம்மவர்கள் பெரு முயற்சி செய்தால் நாடே உண்மையான நல்ல நிலையில் வளர்ச்சி யடையும். நிபுணர்கள் திட்ட மிட்டால் மட்டும் வளருமா? நடை முறையில் அல்லவா வளர்ச்சி இருக்கிறது. குயவன் கை மண்ணானது குயவன் நினைத்த மாதிரி அமைகிறது. காரணம் மண் எவ்விதம் வேண்டுமானாலும் செய்யப் பதமாக இருப்பதே யாகும். அஃதே போலக் குழந்தை யுள்ளம் இருப்பதால் நன்மையான வழியில் திருப்ப ஏற்ற காலமாகும்.

சில குழந்தை விடுதிகள் ஏற்படுத்தி, சுகாதாரம், மனோ வளர்ச்சி முதலியன உண்டர்கும்படியாக அறிஞர்களையும் வைத்தியர்களையும் ஏற்படுத்தி, பல குழந்தைகளை வளர்த்துப் பயன் எவ்வாறுளது என்று காட்சி யளவையில் காண வேண்டும்.

இதுகாறுங் கூறியவற்றால் குழந்தையின் மனம் களங்க மற்றது என்பதும், நெருங்கிப் பழகுவோரின் தன்மையே குழந்தையிடம் உண்டாகும் என்பதும், குழந்தைகளின் எதிரில் தீய சொல், செயல் நடத்தலாகாது என்பதும், விளையாட்டில் உளமும் வளரும் என்பதும், மேல் நாடுகளில் குழந்தை விடுதிகள் உள்ளன என்பதும், பெற்றோர்கள் சோம்பலில்லாமல் குழந்தையின் வளர்ச்சியையே நாடவேண்டும் என்பதும், பேச்சு நன்னடைப் பழக்கினால் வரும் என்பதும், குழந்தைகள்

இளங்கோ அடிகள்

வேலூர்க் காரழகன்.

அழியா வாழ்வும், கழியாப் புகழும், இகழா மகிழ்வும், நிரம்பப் பெற்ற பொற்புடைப் பைந்தமிழுக்குப் பெரியதோர் பேரிலக்கியத்தை வணைந்த பழுநிய செந்தமிழ்ச் சிலம்புச் செல்வப் புரை தீர்ந்த பெரும் புலவர், செந் தமிழின் சிறப்பைச் சிறக்க வைத்து பைந்தமிழின் பெருமையைப் பிறங்க வைத்து—கன்னித் தமிழின் கனிவைக் கனிவுற வைத்து—அருந் தமிழன்னைக்கு அழியா எழிலொளியைத் திகழ வைத்த தண்டமிழ்ப் புலவர்; முடியுடை மூவேந்தருள் தலையாய சேர வரசனாரின் அருமகனார்.

பெறற் கரும் பேரரசையும் புறக்கணித்து, தாதையுடன் வாழ்வதையும் துறந்து, மாண்புடை மாளிகையிலும் வாழாது, அருளற நெறிக்குறை விடமாய குணவாயில் கோட்டம் புகுந்து, மாசு மாய்த்து, ஆசு அழித்து, உள்ளத்தைப் பளிங்காக்கி, அருந் தமிழாராய்ச்சிப் பீடத் தமர்ந்து, முத்தமிழ் மணி முடி தரித்து, தண்டமிழ்த் தங்கக் கோலேந்தி, அழியா மொழிக்கு, அழியா இலக்கியம் யாத்து, அழியாப் புகழடைந்தார். தூய உள்ளத்தைத் தெய்வத்துடன் சிவண வைத்து, அறிவை இயற்கையுடன் பிணைத்து, உலகியலை ஊன்றி யாராய்ந்து அரும் பொருள்களைத் துளக்கமற விளக்கிக் கலைக் கோயிலெனத் திகழ்ந்தார்.

பல வகையாய்க் கற்பனை செய்து விளையாடும் என்பதும் தீமை யில்லாத மனோ வளர்ச்சிக்குரிய விளையாட்டை விளையாடச் செய்யலாம் என்பதும், அடிக்கடி பயப்படுத்தாமல் மனத்திற் பதிய எடுத்துச் சொல்லித் திருத்துதலே மேல் என்பதும், சமயத்திற்கும் குழந்தைக்கும் ஏற்றவாறு திருத்துதல் வேண்டும் என்பதும் தெரிய வருவன வாகும்.

இவர் யாத்த சிலம்புச் செல்வம், பொன்னொளி யொளிரும் பைந்தமி ழறங்களாலும், சீரிய செந்தமிழ் இயற்கை நெறிகளாலும், உயரிய ஒப்புரவுப் பண்புடைமையாலும், கனிவுறும் கற்பின் ஒழுக்க எழிலாலும், பொலிவுடன் பீடுற்றுப் பிறங்குகிறது. இவர் தம் பேரறிவின் பெருக்கம் விளக்கொளிபோல் தெளிவுடன் ஒளிர்ந்து, ஆற்று வெள்ளம் போல் ஓடுகிறது. இலக்கிய இனிமையால் யாவரையு மின்புற வைத்து மக்களை மாண்புற வைத்தல் கண் கூடு.

மகிழ்வுக்குரிய திருமணத்தையும், மனம் அனலாதற்குரிய மரணத்தையும், உள முவகை யுறுதற்குரிய வீடு பேற்றையும், கண்ணகியின் பீடுடைக் காதலையும், மாதவியின் மாண்புடைக் காதலையும், புலமையில் முழுமை யெய்திக் கனிவுறும் கலையின் உச்ச நிலையுடைய உயர் தமிழில் உரைத்து, சிந்தனைக்கும், கற்பனைக்கும், எழில் திகழும் தண்டமிழில் விருந்தளித்துப் படிப்போ ரனைவரையும் தன்பாலீர்த்து உணர்ச்சியால் உணர வைத்தல் வியப்பன்றோ!

அடிகளார் யாத்த சிலம்புச் செல்வம் முற் காலத் தமிழ் இலக்கியங்களுள் தொன்மையுடைய தாயும், தலையாய தாயு மிலங்குவதுடன் எந் நாட்டிலும், எம் மொழியிலு மில்லாத இயலின் பெருமையும், இசையின் மகிழ்ச்சியும், கூத்தின் உணர்ச்சியும் தளிர்விட் டொளிர்தல் உவமை யற்ற தனிச் சிறப்பன்றோ! உயர் தமிழுக் குயிராயுல்வும் தொல்காப்பியத்தில், தகவுடன் திகழும் செய்யு ளியல்பினின்று சிதையாமல், தமிழ் மரபுக் கொரு சிறிது மாறுமல், திணை மயக்க முதலிய தமிழ்த் துறையினின் றகலாமல், முத்தமிழ் இலக்கிய மலர்வன மெனச் சிலம்புக் கதை சிறந்து விளங்குகிறது.

ஓய்வாலின்புறும் இரவுக் காலத்தில் தண்மையையும் ஒளியையும் நல்கி யாவரையும் களிப்பிற்றிளைக்க வைக்கும் திங்களையும், உழைத்து மகிழ்வில் திகழும் பகற் காலத்தில் வெம்மையையும் ஒளியையும் நல்கும் ஞாயிற்றையும், செடிகொடியும், விலங்கினமும், மக்களினமும், உய்ய உயிராயிலங்கும் மாமழையையும் பெரிதும் போற்றிப் புகழ்தல் அடிகளார் ஒருவரிடத்தன்றோ காண்கிறோம்.

இல்லக் கிழத்தியாகிய கண்ணகியுடன் இன்புறு மில்லற வாழ்க்கையி லீடுபட்ட ஞான்று, சாயலிலும், நடையிலும் முறையே மயிலும், அன்னமும் தோற்றன வென்றும், அவள் தன் மழலைக் கிளவி, குழலையும், யாழையும், அமிழ்தத்தையும், கடந்த தென்றும், தூய்மைக்கும், இனிமைக்கும் முறையே பொன்னுக்கும், கரும்புக்கும் உவமை கூறி, பின்னர் ஆருயிர் உடலிலுறைந்து கிடத்தற்குக் கண்ணகியே என்று கோவலன் கூறுவதை உய்த்துணருங்கால், பார்த்த மாத்திரத்தே புற எழி லில் படிந்திரையாதல் இனிது விளங்குகிறது. இல்லறத்தை இனிதே ஏற்ற கண்ணகி, சுற்றத்தினரையும், விருந்தினரையும் இனிதே ஓம்பிப் பேணினள்.

இல்லறத்தி லிலங்கிய இன்பத்தை இயம்பிய அடிகளார், நாட்டிற்கே இள்ப மளித்துக் கலைப் பிழம்பென மாண்புடன் திகழ்ந்த மாதவியின் கலை யொளியை நம்முன் ஒளிர வைக் கின்ருர். அரச அரங்கில், கூத்து, இசை, யாழ், பாணி, முதலியவற்றுள் துறைபோய பேரறிவு பெற்ற பேராசிரியர் களும், அரசரும், அமைச்சர்களும், பெரியார்களும் வீற்றிருக்க, தெய்வப்பாடல் பாடவும், அதற் கேற்ப யாழும், குழலும், வாச்சியமும், பாணியும் இனிதே இயங்கவும், கூத்தும், பாட்டும் எழிலும் ஒன்றெனத் திகழ்ந்த ஒண்டொடி மாதவி அரங்கேறி பிழையற்றுப் பெரிதும் போற்றவல்ல முறையில் நன்கு நடித்து, அனைவரும் பாராட்டிப் புகழும் பெற்றிமை யெய்தி, ஆயிரத் தெண் கழஞ்சு விலையுள்ள பசும் பொன் மாலையை அரசனிடம் பரிசாகப் பெற்று, பெற்ற அம்மாலையை விலை கொடுத்து வாங்கி மீண்டும் அம்மாலையுடன் எவர் மாதவியை அடைகின்ற னரோ, அவரையே மணப்பதாக உறுதிகொண்ட பின்னர், மாத வியின் கூத்தால் கொள்ளைகொண்ட கோவலன் பணங்கொடுத்து மாலையை வாங்கி, மீண்டும் அம்மாலையுடன் மாதவியையடைந்து கலைக்காதற் கிழத்தி எனத் தகவுடன் கருதி, ஊடலிலும், கூட லிலும் இருவரும் களித்துத் திளைத்ததுடன், வானவரும் வியக் கின்ற இந்திர விழாவில், மாதவி நீல நிற ஆடை யுடுத்தி, கத்தூரிக் குழம்பைக் கதுப்பில் பூசி, செம் பஞ்சுக் குழம்பை சீறடியில் பூசி, அழகிய மோதிரங்களைக் கால் விரலிலணிந்து, பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை, அரியகம் இவ் வைந்து

சிலம்புகளை யணிந்து, முத்து வளையத்தைத் தோளிலணிந்து, மாணிக்கம் பதிக்கப் பெற்றச் சூடகம், செம் பொன் வளையம், நவமணி வளையம் சங்க வளையம், பவழ வளையம் ஆகிய இவை களை முன்னங்கையி லணிந்து, முடக்கு மோதிரம், மாணிக்க மோதிரம், மரகதமணி மோதிரம் இவைகளை விரல்களி லணிந்து, வீரச் சங்கிலியும், நுண்ணிய சங்கிலியும், சரமும், சலடியும், சுரப் பள்ளியும், முத்தாரமும், கழுத்திலணிந்து, இந்திர நீல முடைய வயிரத்தால் கட்டப்பட்ட நீலக் குதம்பையும், வயிரக் குதம்பையும் காதிலணிந்து, தலையில் தெய்வவுத்தி யணிந்து, அல்லி, கொட்டி, குடை, குடம், பண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால் பாவை, வடிவுடன் வீழ்த்தாடல் என்ற பதினொரு ஆடல்களைப் பிழையற ஆடி, பல்லாயிர மக்க ளுக்குக் கலை உணர்ச்சியை ஊட்டிய உயர் சிறப்பினை வரைந்த அடிகளார் காவியப் புலவரோ அல்லது ஓவியப் புலவரோ என்ற ஐயத்திற் கழைத்தேகல் வெள்ளிடை மலை!

இசையா லின்புற வைத்து, நாட்டியத்தால் நலமுற வைத்து, காதலால் கழிபே ருவகை யெய்த வைத்து, இயற்கை யின்பத்திற் றிளைக்க, காதற் கிழத்தி மாதவி, காழ்த்த காதலன் கோவலனை நீல நிறக் கடற்கரைக் கழைத்தேகி, வெண் மணல் பரவிய எழில் திகழு மிடத்தே வீற்றிருந்த ஞான்று, யாழ் மிழற்றுமாறு கோவலனிடம் கொடுக்க, கோவலன் யாழை வாங்கி, இனிதே பாடி மிழற்றுகையில், அகப் பொருள் ததும்பும் கருத் தொளிர்ந்ததை யறிந்த மாதவி, பெரிதும் மகிழ்ந்து, மீண்டும் மாதவி யாழ் மிழற்றி, காதற் பொருள் பிறங்கப் பாடியதைச் செவியுற்ற கோவலன், மாற்றான் மீது பற்றுக் கொண்டா ளெனத் தவறாக வுணர்ந்து பாலையாகப் பிறங்கியதை அடிகளார் விளக்கி, ஒன்றிய இருவ ருள்ளமும் ஊழால் ஒடியு மென்பதை முழக்கி அனைவ ருள்ளத்திலும் அழலைத் திகழ வைக்கின்றார்.

இல்லக் கிழத்தி கண்ணகி, மணந்த கணவன் தணந்தமை யால் தனிமையிலிருந்த ஞான்று உடனிருந்த தோழி தேவந்தி, பிரிந்த கணவன் விரைவில் வந்தடைதற்கு, சோம-சூரிய இரு குளங்களில் மூழ்கி, காமக் கடவுளை வணங்கல் வேண்டு

மென்றமைக்கு, கணவனிருக்கக் கடவுளை வணங்கல் 'பீடன்று' என்று பகர்ந்த கண்ணகியின் கற்பின் திண்மை என்னே!

மாதவியைப் பிரிந்த கோவலன், இல்லம் போந்து இல்லக் கிழத்தியிடம் பிழைத்தமைக்கு வருந்தி, சிலம்பு விற்றுப் பொருளீட்ட மதுரைக் கேகுகையில், வீடுபே றெய்துதற்குரிய பண்பட்ட கவுந்தி அடிகளென்னும் மூதாட்டியைத் துணைகொண்டு செல்லுகையில், அந்தர சாரணர் தோன்றி விளை நிலத்திட்ட வித்து போன்று வினையை ஒழிக்க வியலா தென்றும், சுழற் காற்றுள்ள வெளியில் எரியும் விளக்கு போன்றது, உடலுக்கு முயிருக்குமுள்ள தொடர்பென்றும் உரைத்தமையின் உண்மை யென்னே!

நான் மறையோன், இம் மூவரையும் பார்க்கையில் மதுரைக் கேகும் வழியிலுள்ள புண்ணிய சரவணம்-இட்ட சித்தி—பவ காரண்யம் என்ற மூன்று குளங்களில் ஐந் தெழுத்தையும், எட் டெழுத்தையும் ஓதிக் குளிப்பின், புண்ணிய மெய்தி, விரும்பி யதை அடைந்து, பாவந்தொலைத்துச் சென்ற பிறப்பையும், வரும் பிறப்பையும் அறிய வியலு மென்றமைக்கு, குளங்களில் குளித் தறிந்து கொள்வதினும், பெற்ற பிறப்பைக் கொண்டே கடந்த பிறப்பையும், இப் பிறப்பி லாற்றும் பணியாலே வரும் பிறப்பை யும் அறிய இயலு மென்றதுடன், வாய்மையில் வழுவாது அறம்புரியின் விரும்பியதை எய்தலா மென்று கவுந்தி அடிகள் கூறியதினுயர்வு என்னே!

கவுந்தி அடிகளிடம் விடைபெற்று, ஆய்ச்சியரிட மடைக்கல மான பின்னர், கண்ணகி பேரிடர் பட்டுச் சமைத்து, கோவல னுக் குண வளிக்கையில், அவன், கண்ணகியின் உள்ளன்பினை யுணர்ந்து 'பொன்னே, கொடியே, புனைபூங் கோதாய், நாணின் பாவாய், நீணில விளக்கே, கற்பின் கொழுந்தே,' என வுரைத்த மையை யுன்னுங்கால் கண்ணகியின் பண்புடைமையைப் பைந் தமிழ் ஓவியத்தில் ஒளிர வைத்த பெருமை உணரலாம்.

கோவலன், கண்ணகியின் சிலம் பொன்றைப் பெற்றுக் கூடலடைந்து வீதியில் விற்கையில், பொற் கொல்லனின் சதியால், அரசியின் சிலம்பைத் திருடினவனென்று பழி சுமத்தப்

பெற்று, அரசன் ஆணையால் கொலையுண்டதும்; அக் கொலைச் செய்தியைச் செவியுற்ற கண்ணகி, கலங்கி, சிதைந்து, வெட்டுண்ட இடமேகி, கணவனைக் கண்டு, பொன்னுறு நறுமேனி பொடியான தென்றும், மாலை யணிந்த வுடல் செங்குருதியில் தோய்ந்து வெறுந் தரையில் வீழ்ந்து கிடக்கிற தென்றும், அரசன் அறந் தவறினு னென்றும் புலம்பி, அரசனுடன் வழக்காடி, அரசியின் சிலம்பு வேறு என்றும், தன் சிலம்பு வேறு என்றும் மெய்ப்பித்துக் காட்டவே, அரசன் தவறை யுணர்ந்து இன்னுயி ரிழக்கவே, அவன்றன் மனைவி கோப் பெருந்தேவியின் உயிரும் அகன்றதுடன், கண்ணகியின் சாபத்தால் மதுரை அழலானதும் அடிகளார் விளக்குகையில் கற்பின் பெருமை விளங்குகிற தன்றோ!

தலைவனை யிழந்த தகவுடைய கண்ணகி, தன்னந் தனியே சென்றுகொண்டிருக்கையில், மதுராபுரித் தெய்வம் கண்ணகி கோபத்தைத் தணிக்க முயலுகையில், கண்ணகி ஒருப்படாது விரைந்து சென்ற பொழுதும், ஊழின் விளைவே யாவு மென்று கூறி, சென்ற பிறப்பில் சிங்கபுரத்தில் அரிய கலன் விற்ற சங்கமனை, பரத னென்பான் ஒற்ற னென்று பழி சுமத்தி, அரசனுணையால் வெட்டினு னென்றும், அவன் மனைவி நீலி என்பாள் பதினான்காம் நாள் மலை மீதேறி இறக்கத் துணிந்தபொழுது, தமக்குத் துன்பம் விளைவித்தவருக்கு மறு பிறப்பிலும் துன்ப முண்டாகுமாறு இட்ட சாபமே கோவலனுக்கு மூண்ட தென்றும், சென்ற பிறப்பில் பரதன் தான் இப் பிறப்பில் கோவல னென்றும் கூறி, பதினான்காம் நாள் கோவலனை அடைவாய் என்றுரைத்துச் சென்றதை அடிகளார் விளக்குகையில் சென்ற பிறப்பும், ஊழ் தொடர்ந்து வருவதும் இனிதே விளங்குவன வன்றோ!

மதுராபுரித் தெய்வத்துடன் உரையாடிய கண்ணகி கொடுந் துயருடன் சென்று துர்க்கை கோயிலை யடைந்து கணவனைக் காணும் வரை வறிதே இருக்கப்போவதில்லை என்று கூறி வளையல்களை உடைத்து. மேற்றிசையில் கணவனுடன் வந்ததையும், கீழ்த் திசையில் கணவனை யிழந்து தன்னந் தனியே செல்வதையும் எண்ணி உருகி, வையைக் கரை வழியே திருச்

செங் குன்றம் மலை மீதேறி குறித்த பதினான்காம் நாள் வேங்கை மரத்தின் நிழலில் நின்று, தீவினையாளின் துயர் துடைக்கக் கணவனை வேண்டி அழைத்த பொழுது, வான ஊர்தியில் கணவன் வந்ததும் வானவர் மலர் சொரிய, கண்ணகியும் வான ஊர்தியில் ஏறி இருவரும் விண்ணகம் சென்றதை யறியுங்கால் மா பத்தினியின் மாண்புக்கு வானவரும் வியந்து பாராட்டுவது விளங்குகிற தன்றோ !

கண்ணகி வீடு பேறெய்தியதைக் கண்ட குன்றவர், சேரன் செங்குட்டுவன் தன் மனைவியுடன் மலைவளம் காணப் போந்த பொழுது கூறவே, சீத்தலைச் சாத்தனும் கோவலன் வரலாற்றினை உரைத்திட, செங்குட்டுவனின் மனைவி பெரிதும் வியந்து மகிழ்ந்து, பத்தினிக் கடவுளுக்குக் கோயில் கட்ட வேண்டு மென்று கூறவே, சேரன் செங்குட்டுவன் உடன் பட்டுப் பத்தினி கண்ணகிக்குச் சிலை செய்ய இமயத்தினின்று கல் கொணர்தல் நலமென் றுறுதி கொண்டு, தென்னாட்டு மக்களை இழித்துப் பழித்த வடவரசரை வென்று, அவர்கள் மணிமுடி வீற்றிருந்த தலையில் கல் சுமக்க வைத்தல் வேண்டுமென்று சூளுரை உரைத்து, பெரும் படையுடன் வட நாடேகி கனக விசயரை வென்று, கற்பரசி கண்ணகிக்குக் கோயில் கட்டியது தமிழரன்றி வேறெவர் ?

அடிகளார் சிறந்த பெரும் புலவரென்று விளங்குவதோ டல்லாமல், வையக வாழ் வியலையும், சோழ-பாண்டிய-சேர நாட்டியல்புகளையும், இசை, யாழ், கூத்து முதலிய கலை இயல் களையும் இனிதே கூறி, இலக்கியத்தின் இன்பத்தையும், கலையின் மகிழ்ச்சியையும் தோற்றுவித்து, அனைவரையும் தகவுற வைத்தல் கண் கூடு.

கண்ணகியின் இல்லற இயல்புகளை விளக்குங்கால், இல்லாளுக்குரிய சிறப்பையும்-கலையே உருவான மாதவியின் மாண்புகளை மொழியுங்கால், கலை யியலுக்குரிய உயர்வையும்-பகர்ந்த அடிகளாரின் பெருந் தகைமை யாதெனின், தாழ்வுக் குரிய இயல்பு இரு அணங்குகளிடத்துமில்லை என்பதை விளக்கி, கடற் கரையில் கோவலனும் மாதவியும் யாழ் மிழற்றுகையில்

மாதவி மீது கோவலன் தவறுகக் கருதி மன முடைந்தமையும், அதற்கும் ஊழே காரண மென்றமையும், அனைவரையும் ஆராய்ச்சிக் கழைத்தேகுகிற தன்றே !

மூவேந்தரையும், முத்தமிழையும், மூன்று நாடுகளையும் ஒருங்கே கூறி, மணத்தை முன்னிறுத்தி, மரணத்தை இடையாக்கி, வீடு பேற்றை முடிவாக்கி, செழுமையும், பொலிவும், வளமும், நேர்மையும், தகவும், நீதியும், அறமும், ஒழுக்கமும் ஒளிர் விட்டுத் திகழும் இலக்கியத்தை யாத்த பெரும் புலவரென்று விளங்குவ தோடல்லாமல் பிறருக்குத் தொல்லையும் கவலையும் விளைதல் வேண்டா மென்றும், இறைவனை உணர்தல் வேண்டு மென்றும், உணர்ந்தாரைப் பேண வேண்டு மென்றும், பொய் பகர்தலும் - புறங் கூறலும் கூடா வென்றும், ஊன் உண்ணலும் உயிர்க் கொலையும் அகற்ற வேண்டு மென்றும், கள்ளுங் களவும் காமமும் ஒழித்தல் வேண்டு மென்றும், பிறர் மனை விரும்புதலை விலக்க வேண்டு மென்றும், நன்றி மறவாது அறவினை ஓம்பி மன்பதை இன்புற அறப்பணி யாற்ற வேண்டு மென்றும் மணி மொழி மொழிந்த முத்தமிழ் இளங்கோ அடிகள் வாழ்க.

இலக்கணங் கற்றல் வேண்டுமா ?

புலவர், சி. சுப்பிரமணியன், யூனியன் உயர்நிலைப்பள்ளி, கோவை.

இத் தலையங்கம் கலை யுலகிலேயே ஓர் பேரையத்தை உண்டு பண்ணிற்றே ; என்னை ! யெனின்,

அறிவியல் அகன்று செல்லும் நாகரிக உலகிலே, எளிய முறையில் வருந்தாது வாழ்வை நடத்த முயலுங் காலத்திலே புண் பாட்டிற்குரிய மொழி யிலக்கணம் முட்டுப் பாட்டைக் கற்பாருக்கு விளைகின்றதே. இஃதன்றி வெறுமையான இலக்கிய இன்பத்தையே யறிய ஏன் இலக்கணம் அமைத்தல் வேண்டுமென ஐயத்தோடு அடி வயிற்றி லிடி விழுந்தாற் போல் அலறுவர் ; அன்னார் அறியாமைக் களவே யில்லையாக.

இலக்கணம் மனிதரால் அமைக்க வேண்டுவதன்று. அங்ஙனம் மனிதரால் அமைந்த இலக்கணம் கற்கவும் வேண்டப் படுவதன்று ; ஆயின் இயற்கையால் அமைந்து கிடப்பதே இலக்கணம். அதனை யறிந் தொழுகுவாரே அறிவுடையார்.

அவ் விலக்கணந் தான் என்னையோ வெனின், உலகின் பொருள், செயல் ஆகிய இருவகைக் கூற்றுக்களி லமைந்து கிடக்கும் அமைவு அல்லது ஒழுகலாறு அல்லது உண்மை அல்லது முறைமையே யாம்.

இஃதில்லையேல் உலகமு மில்லையாக. அது வயலுக்கு வரம்பு போலவும், நீர் நிலைக்குச் சூழ் நிலம் போலவும் நுண்ணறிவார் கண்ணறிவிற் குட்பட்டுக் கருத்தில் பதிவதாம். இலக்கண மில்லா வொன்று பாக னில்லா யானை போல நெறியல்லா நெறிச் சென் றழியும். அதுவும் அளவின் மிக்க அமைவு, கையிகந்த தண்டஞ் செய்யுங் காவலன் போலப் பழிப் பெய்தும். ஆகவே அளவிற் பட்டு உணவிற்கு உப்புப் போல அமைந்து கிடப்பதே யதுவாம்.

சிலர் பலர் மொழியின் இலக்கணமே இலக்கணம். வேறு இலக்கண மென்பதே இல்லை எனக் கூறித் தம் அறியாமையை வெளிப்படுத்துவர். உலகில் எப் பொருளும், எச் செயலும் ஓர் உண்மை ஒழுகலாற்றிலேயே இயன்று செல்லும், இவ் வொழுகலாறே இலக்கணமாம். ஆயின் எல்லாப் பொருட்கும், செயற்கும் புற நடை யுண்டென வறிக.

உலகமே ஓர் பல்கலைக் கழகம். அதன் பொருளுஞ் செயலும் பார்ப்பாருக்குப் பற் பல கருத்துள் ளடக்கிய இலக்கியமாய் அமைகின்றது. எனவே அதன் அமைதியை ஏன் இலக்கண மென்னலாகாது?

காட்டாகப் பறவையை எடுத்துக் கொள்வோம். அவை பறக்கின்றன. அதற்குச் சிறகு இன்றியமையாதது. எனவே பறவைக் கெல்லாம் சிறகுண்டு எனும் இலக்கணம் அமைகின்றது. ஆயின் இலக்கணம் அமைந்த பிறகு சிறகு முளைக்கவில்லை. ஆயின் இயற்கையாகச் சிறகிருக்கும் ஏதுவால் பறத்தல் கண்டு இவ் வமைதியினை அல்லது உண்மையினை மனிதன் அறிகின்றான்; அறிதல் வேண்டும். இது பறப்பனவற்றின் இலக்கணம். ஆகவே தான் மனிதனால் இலக்கணம் அமைவ தன்று; ஆயின் இயற்கையால் அமைந்து கிடந்தனவற்றை அறிகிறான் என்றேன். இனும்,

நீரென்றால் ஒழுகுந் தன்மை யுண்டு. எனவே இவ் வியல்பா லமைந்த உண்மையினை மனிதன் அறிகின்றான். அதுவே இலக்கணமாக அமைந்து கிடப்பது அவன் ஆறறிவால் வெளிப்படுகின்றது. நிற்க,

மக்களை எடுப்போம். இவர் கையாலும் வாயாலும் உண வுண்பர். நாவால் பேசுவர். எனவே முன்னேயே இயல்பா லமைந்து கிடந்த தொன்றை யறிந்து வெளிப் படுத்துகின்றான். இது எல்லாவற்றிற்கும் பொதுவா யமைந்து கிடந்த உண்மையாய வழி இலக்கணமா யமைகின்றது. இஃதறியா விட்டால் உலகப் பொருளை யுஞ், செயலையும் இன்னின்ன வென்றறியலாகாது. எனவே இலக்கண மில்லாது உலகமே நடவாதாம்.

ஆயின் சிலர் வினவலாம். மொழி யிலக்கணம் முற்றிலும் ஒவ்வொருவர் கூற்றிலும் முரண் படுகின்றதே; பொதுவான உண்மையாயின் ஒன்றாயன்றோ வமைந்திருத்தல் வேண்டுமென. அற்றன்று, அது மக்க ளறியாமையாலும், உள ஆற்றலின் நுண்மை, பருமையாலுமாம். எங்ஙன மெனின்,

சிலர் வெவ்வேறு திசையினின்று ஓர் நிலையாய் நிற்கும் ஓர் யானையினைப் பார்க்கின்றாராக வைப்போம். அதன் பின்னே நேராக நின்று பார்ப்பானுக்கு முன் காலிரண்டும் பின் காலுள் மறைந்து இரண்டே கால் தெரியும். எனவே அவன் யானைக்குக் கால் இரண்டெனக் கூறுவன். சிறிது

சரிய நின்று பார்ப்பானுக்கு முன்னங் காலுள் ஒன்று எதிர் பின்னங் காலுள் மறைய மூன் றென்பான். இவ்வாறே தாம் தாம் கண்ணிற் பட்டவா றெல்லாம் கழறிச் செல்லு வர். இங்ஙனம் கண் பட்டதே இவ்வாறாயின், மனக் கண்ணு லன்றி பொறிக் கண்ணாற் காண வியலாத மொழி யிலக்கண முரண்பாடு சொல்லவே வேண்டுவதில்லை. எனவே நுண்ணுணர்வினார்க்கே உண்மை புலப்படும். இவ் வுண்மை உணர்ந்தறியப் படாவிட்டால் நாயை நரி என்றும், மனிதனைக் குரங் கென்றும், வாயை முகம் மென்றும் வாய்க்கு வந்தபடி வல்லபடிக் கூறுவர். எனவே வாழ்க்கை யும், உலகியலும் எவ் வழிச் செல்லுமென யான் கூற வேண்டுவதில்லை.

இது கருதி யன்றே மாக்களை மக்களாக்கும் மட்டில்லா அறிவைக் கொடுக்கவல்ல வாய் மொழிக்குத் தமிழரும் தம்மாலியன்ற வரை நுனித் தறிந்து இலக்கணம் அறிந்து வெளிப்படுத்தார். அன்னாரை அறியா ரெனின் பெற்றோர் க்கு யாம் எவ்வகை மக்களாவோம். பேதையராய், ஊமைய ராய்ச், செவிடர்களாய்க் குருடர்களாய்க் கல்லாயல்லவோ கால மென்னும் கடலுள் ஆழ வேண்டும்? முன்னையோர் தாமே புனைந்துரையாய் அமைத்திருப்பாராயின்,

> "காரிகை கற்றுக் கவிபா டலைவிடப்
> பேரிகை கொட்டிப் பிழைப்பதே மேல்"

எனப் பாடி யிருப்பாரா ?

ஆயின் பின்னைக் கண்ட இலக்கணத்தை இலக்கியத் தின் பின்னல்லவா கற்றல் வேண்டும். முன்னேயே கற்க ஏன் இன்றியமையாமை அமைகின்றது எனின், கூறுவேன்.

நாம் மக்களாய்ப் பிறந்ததின் பயன்,

> "அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கைப்
> பண்பும் பயனு மது"

என்றமையால், அன்பால் உலகப் பண் பறிந்து, அறத்தால் அதன் பயனடையவே யாம். எனவே, பண் பெனப்படுவது உலகப் பாடறிந் தொழுகலாகலின், உலகப் பொருட் செயல் உண்மை யறிதல் வேண்டும். இதனுக்கு உலகக் கருத் தையே உள்ளடக்கிய இலக்கியங் கற்றல் வேண்டும்.

எனவே தான் உலகப் பொருளறிய வியலும். அது கற்கச் சொல்லும், அது அறிய எழுத்தும் அறியல் வேண்டும்.

ஆயின் நம் முன்னோர் எல்லாம் நாம் முறையாக எளிதில் அறிந்து கொள்ளச் சுவைத்துக் கொள்ளச் சமைத்துச் சென்றனர். எங்ஙன மெனின்,

எழுத்துக் காண லென்பது எளிதில் நிகழ்வதன்று. யாண்டு பல செல்லும். இது ஆக்கத்தால் வீடு கட்டல் போலச் செங் கல்லும், பின் சுவரும் கட்டிக் கண்டு வீட்டினைப் பெறுதல் போலல்ல. அழிவால் அமைந்திருந்த வீட்டை இடித்துச் சுவரையும், பின் செங் கல்லையும் அரும் பாட்டால் கண்டாற் போலாம். எவ்வா றெனில், மக்கள் தோன்றியவுடன் எழுத்தறிவா ரல்லர். பேசும் வாய்ப் புடையா ரல்லர். ஆயின் உலகப் பொருள், செயலைக் கண்ணுல் காண்பர். இவற்றை மற்றையோர்க்கு முதலில் குறிப்பால் அல்லது நடிப்பால் அறிவுறுத்துவர். எனவே முத் தமிழுள் நாடகம் முதன்மையானது. பின் இயற்கையின் தாக்கலால் வாய்க்குங்கால் மன மிறுகும்போது கடுக உண்டாகும் ஓசை செல்லும் வழியாகிய வாயால் இசைக்கும். எனவே இரண்டாவது இசைத் தமிழ். பின் இவ் விசையே காலா வட்டத்தில் சொற் றொடராகவும், அது அறிவால் வகை பெற்றுச் சொல்லாகவும், பின் அது ஓசை பிளவு பட்டு எழுத்தாகவும் அமையு மென்க. எனவே ஓசையின் பின் கருத் தறிவிக்கும் சொற் றொடரே இயற் றமிழாம்.

ஆகவே இம் முறையே பொருளைப் புலப்படுத்தச் சொல்லும், அது பிளவுறப் பின் எழுத்தும் ஆராய்ந் தறிந்தான் மனிதன் அமைந்து கிடந்ததனை.

எனவே இம் முறை மாருமலேயே குழவிப்பருவத்து நடந்து பின், அது மயங்கிக் கிடப்பது கண்டு அம் மயக்க மற முறையும், தொகையும், வகையும், விரியும் வேண்டு மாகலின் எழுத் தறிந்து, சொல்லறியப் பொருளறியப் புறப்படுகின்றேம். எனவே தமிழர் முன்னோர் கண்டன வெல்லாம் கருத்துடையதே. ஆயின் அதனை உருத் தெறியும் உள்ளத்தால் உண்மை யறியாது அதனுக்கு உலை வைப்பதென்பது உப்பில்லாச் செயலாகும்.

(272-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பயிற்சிச் சாலைகள் பல்வளம் ஓங்கி
சமயப் புலமை தாய்மொழிப் புலமை
நாடெலாம் பெற்று நன்கொளி பரவ
அவற்றின் நற்றாய் ஆகி வளர்க்கும்
பேரறம் பூண்டமை பெருமிதத் துடனே
இயம்புதும் நுமக்கே! இனிது வாழியர்!
ஞாயிறு மதியென நாடெலாம் நாடி
அருள்ஒளி வீசும் அம்மை அப்பராம்
உங்கள் அருட்டொண் டுணர்வேம் ஆதலின்,
நெருங்கிய நுங்கள்முன் சுருங்கிய வேண்டுகோள்
சிலசில கூறுதும் செவியருள் வீரே!
சென்னையில் அண்ணா மலையில் திகழும்
பல்கலைக் கழகம் பகர்ஈர் இடங்களும்
மும்மூன் றிடங்களிச் சங்கம் முன்னிட
[1] ஆய்வுக்குழு வினுள் அருளல் வேண்டும்.
அவ்விரு பல்கலைக் கழகத் திலங்கும்
[2] ஆட்சிக் குழுவினுள் அமைந்துதொண் டாற்ற
ஒவ்வோ ரிடந்தந் துதவல் வேண்டும்.
ஆங்குள பாட அமைப்புக் குழுக்களில்
தேர்வினர் குழுக்களில் திகழ்மூன் றிடங்கள்
அமைந்திடும் ஆணை அருளல் வேண்டும்.
தமிழ்க்கலை வளர்ச்சி இயக்கம் தாமாம்
எங்கணும் எமக்கொரு இடம்தரல் வேண்டும்.
புகுசரித் திரங்கள், புதைபொருள் ஆய்வுகள்
விரிநூற் பட்டியல் வெளியிடும் இடந்தொறும்
நம்தம் மொழித்திறம், நற்பண் பாடுகள்
ஆகிய இவைகளில் அரசிய லாரும்
பல்கலைக் கழகமும் மல்குறும் ஊக்கம்
மேற்கொளப் பெரிதும் வேண்டுகின் றேமே!
மாகாண அரசியல் மத்திய அரசியல்
ஆவோர் தமக்குமண் அகழுறு தேர்ச்சியில்
புகாரெனும் காவிரிப் பூம்பட் டினமே
உறையூர், வல்லம், உற்ற ஆர்க் காடே
ஆயதொல் லிடங்களில் அகழ்ந்தா ராய்ந்திடத்
தூண்டுதல் அருள வேண்டுதும் யாமே!

---

[1] Senate.
[2] Syndicate.

தெரிக்குமா ராய்ச்சி சரித்திரக் குறிப்பும்
இசைநூற் குறிப்பும் இயலுடற் குறிப்பும்
ஆய பற்பல அறிவிக் கும்மெனும்
உண்மை நிலையினை உரைத்தும் யாமே!
இந்திய நாட்டினும் ஏனைநா டுகளினும்
தங்கும் பொதுநிலை இடங்கள் தம்மினும்
தனிப் பட்டவர்கள் தம்மிடங் களினும்
சைனு, திபெத்தெனச் சாருமீ ரிடத்துள
ஆசிர மங்கள் அருநூல் நிலயம்
[3] ஆம்வே திகன்நூல் நிலயம் அவைகளில்
கி. மு. ஏழாம் நூற்றாண் டின்முன்
ஆய பழம்பெருஞ் சுவடிக ளுளதை
கற்றோர் யாவரும் முற்ற உணர்வர்.
இவற்றிற் கெல்லாம் இயலுமோர் பட்டியல்
மேவிட அருள்செய வேண்டுதும். மற்றும்
இவைகளை விளக்கும் [4] பட்டியல் தமக்கெலாம்
[4] தொகுத்த பட்டியல் வகுத்திடல் வேண்டும்.
இற்றை நாள்வரை எழுந்தன வாய
தமிழ்மொழி நூல்கள் தமிழ்வெளி யீடுகள்
இவையெனத் தொகுத்த எத்தகை நூலும்
இந்நாட் டெழுந்தில; அரசிய லாரும்
கலைக்கழ கங்களுங் கருத்தினிற் கொண்டே
தகுமொரு பட்டியல் தந்திடல் வேண்டும்.
எழும்ஆண் * டைம்ப தெழுவா யாக,
ஆண்டிற் கிருமுறை அல்ல தொருமுறை
அத்தகைப் பட்டியல் அருள்வா ராக!
மாட்சியும் காட்சியும் வயங்கிய மன்னரே!
புவியுறு மக்களைப் புரந்திடும் அன்னையே!
இச்சங் கத்திற் கெழுந்தருள் நுமக்கே
நன்றியும் வணக்கமும் நயந்தளிக் கின்றேம்!
எந்நல் வாழ்வும் எழிலுற ஓங்கி
ஊழி ஊழி ஊழிகள்!
வாழி! வாழியிம் மண்மிசை யானே.

ஆ. யா. அருளாநந்தசாமி நாடார்,
சங்கத் தலைவர்.

---

[3] Vatican Library.
[4] Catalogus. [4] Catalogarum,
* 1950.